விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com


# வலம்புரி
Valampurii

சங்கு 24
ஒலி 086 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 01 புதன்கிழமை (15.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்து

# நாடு முழுவதும் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

### அத்தியாவசிய சேவைகள் முடங்கும் அபாயம்



(கொழும்பு) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வரி, வட்டிவீதம் அதிகரிப்பைக் கண்டித்து நாடு முழுவதும் இன்று பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

47 தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதால் நாடு முழுமையாக ஸ்தம்பிதம் அடையவுள்ளதோடு அத்தியாவசிய சேவைகளும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கணிப்பில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை

### அமைச்சர் பந்துல எச்சரிக்கை



07

## குடத்தனையில் 52 நாட்களான குழந்தை உயிரிழப்பு

(கரணவாய்)

மூச்சயந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட 52 நாட்களான

15

## பாடசாலைகள் இன்று நடைபெறாது

(கொழும்பு)

வட மாகாணம் உட்பட நாடு முழுவதும் இன்று பாடசாலைகள் நடைபெறமாட்டாது.

நாடளாவிய ரீதியில் சகல தொழிற்சங்

15

## உள்ளூராட்சித் தேர்தலை உடன் நடத்துங்கள்

### மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடன் நடத்துங்கள்; தேர்தல் நடத்துவது அரசின் பொறுப்பு என வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## போராளிக்கு உதவி; பொலிஸார் கைது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் போராளி ஒருவர் போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்வதற்கு உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை

15

## யாழில் பிரபல நகைக்கடை உரிமையாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பிரபல நகைக்கடை உரிமையாளர் மரணமடைந்துள்ளார்.

விபரீத முடிவெடுத்து அவர் உயிரிழந்துள்ளார்.

இதில் நடராசா கஜேந்திரன் (வயது-44) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் உள்ள அவரது வீட்டில் தற்கொலை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

15

## பொதுப் போக்குவரத்து ஸ்தம்பிதமடையாது

### அரச, தனியார் பேருந்து சங்கங்கள்

(கொழும்பு)

புகையிரத தொழிற்சங்க போராட்டத்தினால் பொதுப் போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. வழமைக்கு மாறாக அதிக பேருந்துகளை இன்று சேவையில் ஈடுபடுத்துவோம் என அரச மற்றும் தனியார் பேருந்து

15

## இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு மேலும் 4 நாடுகள் ஆதரவு

### அமைச்சர் அலி சப்ரி



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு மேலும் நான்கு நாடுகள் ஆதரவளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, பாரிஸ் கிளப் ஆகியன ஏற்கெனவே தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன என அலி சப்ரி தெரிவித்தார். (ம-7)



போராட்டங்களின்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் விஷ கண்ணீர் புகை தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வடமாகாண அதிபர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

நாடளவிய ரீதியில் இன்று நடைபெற வுள்ள தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வட மாகாண அதிபர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வட மாகாண அதிபர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், 2023.03.15ஆம் திகதி நடைபெறவுள்ள ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் வடமாகாண அதிபர்கள் சங்கம் இணைந்து கொள்கின்றது என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

அதிபர்கள் நீண்டகாலமாக எதிர்நோக் கும் பல்வேறு பாதிப்புக்களிற்கான தீர் வினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள வேலை நிறுத்தத்தில், இன்றையதினம் வட மாகாண அதிபர்கள் சங்கம் இணைந்துகொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

மேல் மாகாணத்தில் இன்று நடைபெறவிருந்த தவணைப் பரீட்சைகளை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் இன்று பரீட்சைக்கு வருவதற்கு ஏற்படக்கூடிய போக்குவரத்து இடையூறுகளைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக மேல்மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று நடைபெற இருந்த 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக் கான தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெற உள்ளன.

அத்துடன், இன்று நடைபெறவிருந்த 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தவணைப் பரீட்சை கள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற வுள்ளன. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது
பாடசாலை ஆசிரியர்
**திருமதி.கலாவாணி தேவேந்திரராசா**
அவர்களின் அன்புக்
கணவர்
**திரு. செல்லத்துரை தேவேந்திரராசா**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-6157)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

# நாவாந்துறையில் விபரீத முடிவெடுத்த பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெடுத்த பெண் ஒரு வர் உயிரிழந்துள்ளார். நேற்று மதியம் நாவாந்துறையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் அதே பகுதியை சேர்ந்த செல்வராசா நிக்ஸ்னா (வயது 21) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14901)

**074 318 7263 | 076 755 8606**

## நிறைவேற்று அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் கடமையாற்று வதற்கு பின்வரும் தகுதியுடைவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.**

**பதவி வெற்றிடம் - 01: நிறைவேற்று அலுவலர்**

**நிபந்தனைகள்**

- பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது அரசசேவைப்பதவி நிலைத் தரத்திலிருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- இந்து சமயத்தவராகவும் சமய ஆசாரசீலராகவும் இருத்தல் வேண்டும்.
- கோவிலின் சூழலில் தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழிப் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புலமையுடையவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஓய்வு நிலையுடையவர்கள் விண்ணப்பிக்கும் போது தேக ஆரோக்கியத் தினை உறுதிப்படுத்தி வைத்திய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)

தாங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை செயலாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகரிக்கு பதிவஞ்சல் மூலம் 30.03.2023ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**திரு.ந.மோகனரூபன்**
**செயலாளர்**
**அறங்காவலர்சபை**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்**
**நயினாதீவு.**

(C-6160)

## கணிதப் பேரொளி ஓய்ந்ததுவோ!



தோற்றம்
21.07.1967

மறைவு
14.03.2023

**கணிதப் பேராசான்**
**திரு. B.P.பாஸ்கரன்**

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் மாணவ சமூகத்திற் கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-6161)

றோயல் அக்கடமி, நல்லூர், யாழ்ப்பாணம்

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யூரியா உரத்தின் விலை மேலும் குறைக்கப்படும்

## விவசாய அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

**யூரியா உரத்தின் விலை இந்த வருடம் மேலும் குறைக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

சீன அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட எரிபொருளை வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், உயர் பருவத்தில் 10,000 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வந்த யூரியா உர மூட்டை ஒன்றின் விலை 7,500 தொடக்கம் 9000 ரூபாய் வரை குறைக்கப்படும்.

ஒரு ஹெக்டேயருக்கு 55 கிலோ ரி.எஸ்.பி அல்லது மண் உரம் வழங்க விவசாயத் துறை பரிந்துரைத்துள்ளதுடன் அதே அளவு உரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

அத்துடன் பண்டி உரத்தின் விலை உயர்மட்டத்தில் உள்ளதால் அந்த உரத்தின் விலையை 10,000 ரூபாவாக குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம்



செலுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (நி)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைபவர்கள் அங்கு குடியேற முடியாது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

ஆபத்தை பொருட்படுத்தாமல் பலர் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சிப்பது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேநேரம் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்காக தொடர்ந்தும் இணைந்து செயற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சிப்பவர்கள் அங்கு செல்வதற்கு பூஜ்ஜிய வாய்ப்பு கூட இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (நி)

# பட்டதாரி ஆசிரியர் சேவைக்கான பரீட்சை இம்மாதம் 25 ஆம் திகதி

(கொழும்பு)

அரச பணியில் உள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை மார்ச் 25 ஆம் திகதி நடைபெற உள்ளது.

நாடு முழுவதும் 341 நிலையங்களில் இதற்கான பரீட்சை நடத்தப்படும்-என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பரீட்சை திணைக்களம் ஏற்கனவே எடுத்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாண அடிப்படையில் உருவாகும் வெற்றிடங்களுக்கு மாகாண சபைகள் வருடாந்தம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

# மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம்



(கண்டி)

அரசாங்கத்தின் சமகால நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டி - அம்பதென்ன பகுதியில் மக்கள் தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்கட்டண அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெலியத்த - கஹவத்தை பகுதியிலும் மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக தீப்பந்தம் ஏந்தி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி)

# விடைத்தாள் திருத்தும் பணிக்கு 6 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கு மேலும் சுமார் 6000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டு கடமைகளுக்காக இதுவரை 13,000 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

மதிப்பீட்டுப் பணிகளுக்காக சுமார் 19,000 ஆசிரியர்கள் தேவைப்படுவதாகவும் முக்கியமாக விஞ்ஞானப் பிரிவுக்கு ஆசிரியர்கள் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அத்தியாவசிய சேவையாக தபால் சேவை- வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

தபால் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தபால் சேவை தொடர்பில் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அதன் கிளைகள் வழங்கும் சேவைகள் இன்றியமையாதவை என கருதி குறித்த வர்த்தமானி வெளியிடப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# அரசியல் அழுத்தங்களால் வாக்குச்சீட்டு அச்சிடுவதில் தாமதம்

## அரச அச்சக திணைக்கள சேவை சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் ஈடுபட சகல ஊழியர்களும் தயாராக உள்ளார்கள். ஆனால் அரசியல் அழுத்தம் காரணமாக வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என அரச அச்சகத் திணைக்கள சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் அசங்க சதுருவ தெரிவித்தார்.

அரச அச்சகத் திணைக்கள தலைவருடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சிமன்றத் தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28,29,30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்தவும் பொது வாக்கெடுப்பை எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்தவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆனால் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வாக்குச்சீட்டு அச்சிடும் விவகாரம் தொடர்பில் அரச அச்சகத் திணைக்கள தலைவர் கங்கானி லியனகே ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு கருத்தை குறிப்பிடுகிறார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்கு நிதி ஒரு தடையில்லை. நிதியமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கையே தடையாக உள்ளது என குறிப்பிடுகிறார். மறுபுறம் நிதி இல்லாமல் வாக்குச் சீட்டுக்களை அச்சிட முடியாது என குறிப்பிடுகிறார்.

முரண்பட்ட இருவேறுபட்ட கருத்துக்களை முன்வைத்து அச்சகத் தலைவர் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் போது முழுமையான அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட நிதியில் பெருந்தொகையான நிதியை முற்பணமாக பெற்றுக் கொண்ட அச்சகத் திணைக்களம் பணிகளை முன்னொரு போதும் ஆரம்பிக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் போது ஒரு ரூபாய் முற்பணம் கூட செலுத்தப்படவில்லை. 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின் போது 30 மில்லியன் ரூபாய் மாத்திரமே அச்சக பணிகளுக்காக வழங்கப்பட்டது. ஆகவே வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு நிதி ஒரு தடையில்லை.

வாக்குச்சீட்டு அச்சிடல் தொடர்பில் அரச அச்சகத் திணைக்கள தலைவர் பொய்யுரைக்கிறார். தேர்தலை நடத்துவதற்காக வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் ஈடுபட சகல சேவையாளர்களும் தயாராக உள்ளார்கள்.

ஆனால் அரசியல் அழுத்தம் காரணமாக அச்சகத் திணைக்கள தலைவர் வாக்குச்சீட்டு அச்சிடலுக்கு தடையாக செயற்படுகிறார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிந்தது இறுதி டெஸ்ட் கவாஸ்கர் கிண்ணம் வென்றது இந்தியா




இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடைபெற்றது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 480 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 571 ஓட்டங்கள் குவித்து ஓல்அவுட் ஆனது. நிதானமாக ஆடிய விராட் கோலி 186 ஓட்டங்கள் எடுத்தார்.


சுப்மன் கில் 128 ஓட்டங்களும் அக்ஷர் படேல் 79 ஓட்டங்களும் கே.எஸ்.பரத் 44 ஓட்டங்களும் எடுத்தனர். 91 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலியா அணி 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 3 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிராவிஸ் ஹெட் 3 ஓட்டங்களுடனும் குனேமேன் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று முன்தினம் 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து ஆடிய டிராவிஸ் ஹெட் 90 ஓட்டங்கள் விளாசினார். லபுசங்கே 63 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பிற்பகல் வரை தொடர்ந்து பட்டிங் செய்த அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 175 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் போட்டியை அத்துடன் முடித்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இதனால் போட்டி டிரா ஆனது.

ஏற்கனவே இந்தியா 2 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்ததால், 2-1 என தொடரை வென்றது. இதன்மூலம் இந்தியா தொடர்ந்து நான்கு முறை பார்டர் கவாஸ்கர் கிண்ணத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

# ஒருநாள் போட்டியை 40 ஓவர்களாக குறைக்க வேண்டும் - ரவிசாஸ்திரி



20 ஓவர் கிரிக்கெட் வருகைக்கு பிறகு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி ஆகியவற்றின் மீது ரசிகர்கள் ஆர்வம் குறைந்துள்ளதாக கருதப்படுகிறது.

இதையடுத்து டெஸ்ட் போட்டி மீதான ஆர்வத்தை அதிகரிக்க உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி நடத்தப்படுகிறது.

இதற்கிடையே ஒரு நாள் போட்டி மீது ரசிகர்கள் கவனத்தை இழுக்க இந்திய அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி யோசனை தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டி உயிர்ப்பித்து இருக்க எதிர்காலத்தில் 40 ஓவர் ஆட்டங்களாக குறைக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இது ரசிகர்களின் கவனம் குறைந்து போவதை தடுக்கும்.

1983 ஆம் ஆண்டு கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது அது 60 ஓவர்கள் கொண்ட போட்டியாக இருந்தது.

பின்னர் 50 ஓவர்களாக குறைக்கப்பட்டது. தற்போது 40 ஓவர்களாகக் குறைக்க வேண்டிய சரியான நேரம். காலத்திற்கு ஏற்ப வளர்ச்சி அடையுங்கள். வடிவமைப்பை குறையுங்கள் எனத் தெரிவித்தார். (4)

# அடுத்த மாதம் இலங்கை வருகிறது அயர்லாந்து



இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக அயர்லாந்து ஆண்கள் அணி ஏப்ரல் மாதம் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இரு அணிகளும் ஒரு டெஸ்ட் மற்றும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடும் என முன்னதாக அறிவிக்கப்பட்ட போதும் இரண்டு டெஸ்ட் போட்டிகளாக இவை மாற்றப்பட்டுள்ளன.

இரண்டு டெஸ்ட் போட்டிகளும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறும் என்றும் இதற்காக எதிர்வரும் 9 ஆம் திகதி அயர்லாந்து அணி இலங்கை வரவுள்ளது என்றும் அயர்லாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 120 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 330 | 350 | 350 |
| தக்காளி | 150 | 160 | 80 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 120 | 180 | 140-200 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 | 60 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 130 | 130 |
| பாகற்காய் | 450 | 600 | 400 | 500 |
| வெண்டக்காய் | 350 | 280 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 220 | 240 | 250 | 250 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 180 |
| கறிமிளகாய் | 350 | 200 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 1800 | 1800 | 1500 | 1500 |
| போஞ்சி | 200 | 280 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 80 | 140 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 300 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 120 |

# ஐ.சி.சியின் பெப்ரவரி மாத சிறந்த வீரராக ஹாரி புரூக்



இங்கிலாந்து இளம் வீரர் ஹாரி புரூக் பெப்ரவரி மாதத்திற்கான ஐ.சி.சியின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்திய ஓல் ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் குடாகேஷ் மோட்டி ஆகியோரின் கடுமையான போட்டியை முறியடித்து, வளர்ந்து வரும் இங்கிலாந்து நட்சத்திர வீரர் ஹாரி புரூக் விருதுக்கான வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் டெஸ்டில் அறிமுகமான போதிலும், இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் ஏற்கனவே இங்கிலாந்தின் புதிய ஆபத்தான மனிதராக உருவெடுத்து வருகிறார்.

மேலும் டிசெம்பரில் ஐ.சி.சி மாதத்திற்கான சிறந்த வீரர் விருதை வென்ற பிறகு, அவரது வேகம் இன்னும் அதிகரித்துள்ளது.

பெப்ரவரியில் அவர் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மிகச் சிறப்பாக செயற்பட்டார்.

குறிப்பாக் வெலிங்டனில் நடந்த இரண்டாவது டெஸ்டில் 24 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்சர்கள் உட்பட ஒரு இன்னிங்ஸில் 186 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

மொத்தம் நடந்த இரண்டு டெஸ்டில் அவர் 329 ஓட்டங்கள் எடுத்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பீடி இலைகளுடன் ஒருவர் கைது



(புத்தளம்)

புத்தளம் மூக்குத் தொடுவா கரையோரத்தில் நேற்று முன்தினம் இரவு பீடி இலைகளை கடத்துவதற்கு முற்பட்ட ஒருவர் கடற்படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பீடி இலைகளை சட்டவிரோதமாக வாகனத்தில் ஏற்றுவதாக தம்பபண்ணி கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய உடப்பு கடற்படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலைகள் மற்றும் காய்ந்த மிளகாய், கொத்தமல்லி ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இதன் போது நீர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், காய்ந்த மிளகாய் மற்றும் கொத்தமல்லி சுமார் 2 கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியென மதிப்பிடப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், காய்ந்த மிளகாய், கொத்தமல்லி, கடத்தலுக்குப் பயன்படுத்திய லொறி ஆகியவற்றை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தம்ப பண்ணி கடற்படையினர் தெரிவித்தனர். (நி)

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அதனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வாகன உதிரிப்பாகங்களின் விலை இம்மாத இறுதிக்குள் குறைவடையும்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைவதால் வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் இம்மாத இறுதிக்குள் குறையும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

டயர், பேட்டரி போன்ற உபகரணங்களின் விலை ஏற்கனவே குறிப்பிட்ட அளவில் குறைந்துள்ளதால், வரும் ஏப்ரல் மாதம் பேருந்து கட்டணத்தை குறைக்க வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# வீரவன்சவுக்கு எதிரான பிடியாணையை நேற்று மீளப் பெற்றது நீதிமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவு மீளப் பெறப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் அவரை கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்தார்.



இருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தனது சட்டத்தரணியுடன் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சரணடைந்தார். (நி)

# வருமானம் அதிகரித்தால் தான் மானியம் வழங்க முடியும்

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

வரி சீர்திருத்தங்களினால் அரசாங்கத்திற்கு வருமானம் அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் மானியங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அரச ஊழியர்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் மாத்திரமே புதிய வரிசீர் திருத்தத்திற்கு உள்வாங்கப்படுவதோடு, 90 வீதமானவர்கள் புதிய வரிசீர்த் திருத்தத்திற்கு உட்படுவதில்லை.

எனவே, புதிய வரிச் சீர்திருத்தத்தில் அரசாங்கத்திற்கு ஏதேனும் ஒரு வழியில் வருமானம் அதிகரித்தால், அனைத்து அரச ஊழியர்களுக்கும் மானியம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

15.03.2023
பங்குனி 01, புதன்கிழமை
அட்டமி பிற்பகல் 3.28 மணிவரை

மூலம் பின்னிரவு- 3.17 மணிவரை
சுபநேரம் -4.51-6.21 மணிவரை
இராகுகாலம்- 12.21-1.51 மணிவரை

சந்திராஷ்டமம் -ரோகினி
உலக மாற்றுத்திறனாளிகள் தினம்

வளவன்




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்,எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.




ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்க்ளும் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள்.




நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் வளர்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.




சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

படித்த பின் கிடைக்கும் அறிவு பட்டை தீட்டிய வைரம் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதி விபத்து

## இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை' இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கைதடிப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்து வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மஹேந்திரா வாகனத்தின் பின்னால் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த 24 வயதான இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞனை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# காட்டு யானைகளால் தொடர் அழிவுகளை எதிர்கொள்ளும் கண்டாவளை மக்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் தொடரும் காட்டு யானைகளால் தொடர்ந்தும் பெரும் அழிவுகளை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை புளியம்பொக்கணை வண்ணத்தியாறு பகுதியில் காட்டு யானைகளினால் தோட்டச் செய்கை மற்றும் தென்னை செய்கை என்பவற்றை காட்டு யானைகள் அழித்துள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் தென்னைச்செய்கை என்பவற்றை முற்று முழுதாக அழித்து வரும் யானைகளில் இருந்து எம்மையும் எமது வாழ்வாதாரத்தையும் காப்பாற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை எனவும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தெரிவித்த போதிலும் எந்த பயனுமற்று போயுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 1.30 மணியளவில் வண்ணாத்தியாறு பகுதியில் ஒன்றரை ஏக்கர் அளவில் தென்னை செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்து மூன்று நான்கு வருடம் கடந்த நிலையில் உள்ள 22 தென்னை மரங்களை முற்று முழுதாக அழித்ததுடன் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த பகுதிகளில் அழிவை ஏற்படுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-315-316)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டையொட்டிய மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழககிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபரும் பிரான்ஸ் அரசினால் செவாலியே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவருமாகிய சிவயோகநாயகி இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-33)



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று யாழ்.நகரில் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.அண்ணளவாக 2000 நபர்கள் பங்குபற்றிய இவ் நடைபவணியில் சில ஆர்வம் மிக்க சாரண சிறார்கள் முன்னோடியாக செயற்பட்டு, வீதிகளில் காணப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் வீசப்பட்ட பொருட்களை சேகரித்த வண்ணம் இவ் நடைபவனிக்கு புதியதோர் கோணத்தில் வலுச் சேர்த்திருக்கின்றார்கள். (படம்- சிவசாந்தன்)

# மோ.குண்டு மீட்பு



வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி ஒன்றில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணிஒன்றில் மோட்டார் குண்டு ஒன்று இருப்பது நேற்று அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அந்தக் குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (4-6-104)

# மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு



(அராலி)

லயன்ஸ் கழக பிராந்திய மற்றும் வலய தலைவர்களை வரவேற்கும் நிகழ்வும் மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பிராந்திய தலைவர் பி.ஜங்கரன் மற்றும் வலய தலைவர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் ஆகியோர் வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து வடமராட்சி கிழக்கு பகுதியில் கண்பார்வை குன்றியவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் கண்பார்வை குன்றிய கண்ணாடி பெற்றுக் கொள்ள வேண்டியவர்களும் கலந்து கொண்டனர். (4-6-104)

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை தட்டாதெருச் சந்திக்கு அருகாமையிலுள்ள காலா ஜோதி சனசமூக நிலையத்தில் நடை பெறவுள்ளது.

வட்டாரம் 1, 2 மற்றும் 9ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் / சோலை வரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் இதற்கு பொதுமக்கள்தமதுஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (4)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அரசடி ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பகல் சங்காபிஷேகமும் விசேட பூஜைகள், திருவூஞ்சல் திருவிழாவும் ஞானவைரவர் வீதி வலம் காட்சி இடம்பெறும். (4-6)



மன்னார் மாவட்டத்தில் மகளிர் தின விழாவும் சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நகர சபை கலாசார மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நடைபெற்றது.

(படம் -ஜோசப் நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்
வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- **முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)**
- **முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021 (புதிய பாடத்திட்டம்)**

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மே மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 31.03.2023 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**

(சி-6155)

## கேள்வி அறிவித்தல்- நல்லூர் பிரதேச சபை
## சபைநிதி/ அபிவிருத்தி வேலைத்திட்டம் -2023 (கட்டம் I)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச்சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04 தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021 222 2700, 021 314 2841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2023.03.15 ஆம் திகதியிலிருந்து 2023.04.04 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2023.04.06 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2023.03.27 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-I/2023/ 01 | கொக்குவில் குளங்கரை கிழக்கு பக்க புகையிரத வீதி அருகிலுள்ள பாதையை புனரமைத்தல். | 3.90 | 90 நாட்கள் | C8 / C7 | 2023.06.08 | 58,500.00 | 2023.07.06 |
| 2. | NPS/CF-I/2023/ 02 | கொங்கிறீற், கிறனைற் கற்களினால் வரவேற்புப் பெயர்பலகை அமைத்தல் | 1.93 | 60 நாட்கள் | C9 / C8 | 2023.05.25 | 28,950.00 | 2023.06.22 |
| 3. | NPS/CF-I/2023/ 03 | கொங்கிறீற் வீதி புனரமைத்தல் - பொதி இல 01 (கொக்குவில், கோண்டாவில், இணுவில் பகுதி) | 7.38 | 90 நாட்கள் | C7 / C6 | 2023.06.17 | 110,700.00 | 2023.07.15 |
| 4. | NPS/CF-I/2023/ 04 | கொங்கிறீற் வீதி புனரமைத்தல் - பொதி இல 02 (கல்வியங்காடு, அரியாலைப் பகுதி) | 0.92 | 60 நாட்கள் | C9 / C8 | 2023.06.08 | 13,800.00 | 2023.06.22 |

(சி-6156)

**தலைவர்,பெறுகைக்குழு,நல்லூர் பிரதேச சபை,கொக்குவில்.**

15.03.2023

## நாட்டின் சட்டத்தை மீறி
# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை
## அரசாங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**அத்தியாவசிய சேவைகளுக்கு என நியமிக்கப்பட்ட அரச ஊழியர்கள் நாட்டின் சட்டத்தை மீறி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் விரைவில் கிடைக்கவுள்ள நிலையில் நெருக்கடியில் இருந்து வெளியேற நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அனைவரின் நலனுக்காக இந்த நடவடிக்கைகளை எடுத்துவரும் போது மக்களின் வாழ்க்கை, மாணவர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்க அனுமதிக்க போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அரச சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல, அத்தியாவசிய சேவைகளாக இவற்றை பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளான போக்குவரத்து, துறைமுகங்கள், தபால், மின்சார சேவைகளை வழங்க தவறினால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட 16 தமிழக கடற்றொழிலாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இந்திய பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இதுவரை காலமும் பறிமுதல் செய்யப்பட்ட 102 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்குள் இலங்கை கடற்படையினரால் தமிழக கடற்றொழிலாளர்கள் மீது மூன்றாவது தடவையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுபோன்று இடம்பெறும் சம்பவங்கள் ஏழை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கிறது.

மேலும் அவர்களின் மனதில் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய மத்திய அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்துகின்றபோதும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் அரசிற்கு எதிராக வெடித்தது மக்கள் புரட்சி





(டெல், அவிவ்)

இஸ்ரேல் நாட்டில் புதிதாக இயற்றப்பட்ட நீதித்துறை தொடர்பான சட்ட மசோதாவிற்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

நீதித்துறை மறுசீரமைப்பு சட்ட மசோதாவின்படி அரசு நியமிக்கும் 9 பேர் கொண்ட குழுக்கள் மூலமாக, சுப்ரீம் கோர்ட்டைத் தவிர மற்ற நீதிமன்றத்தின் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதாகும்.

முன்னதாக, நீதித்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும் நீதித்துறை அதிகாரத்திற்கும் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கும் சமநிலையை மீட்டெடுக்கவும் நீதித்துறையில் மாற்றம் கொண்டுவர இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, இது ஜனநாயகத்துக்கு எதிரான செயல் என எதிர்க்கட்சி தலைவர்களும் இஸ்ரேல் மக்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இஸ்ரேல் அரசின் முடிவை எதிர்த்து 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கடந்த சில வாரங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டம் இஸ்ரேல் வரலாற்றிலேயே மிகப்பெரிய போராட்டம் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், தலைநகர் டெல் அவிவ்வில் கடந்த சனிக்கிழமை நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

ஏராளமான போராட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சூழலில் நீதித்துறை அதிகாரத்தை மாற்றியமைக்கும் மசோதாவை இந்த வாரம் பாராளுமன்றத்தில் பிரதமர் நேதன்யாகு தாக்கல் செய்யவுள்ளார் என தகவல் வெளியானது. (நி)

# நடுக்கடலில் தத்தளித்த ஆயிரம் அகதிகள்



(வத்திக்கான்)

இத்தாலிக்கு சென்ற சில அகதிகள் நடுக்கடலில் சிக்கித் தவித்ததாக கடலோர காவல் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, கடலோர காவல் படையினர் நடுக்கடலில் படகுகளில் சிக்கித் தவித்த அகதிகளை பத்திரமாக மீட்டுள்ளனர்.

1,000 இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

துருக்கி, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடான இத்தாலிக்கு அகதிகளாக செல்கின்றனர்.

இதேவேளை, கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இத்தாலியின் கலபிரியா பகுதியில் அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அதில் 2 குழந்தைகள் உட்பட 76 பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து இத்தாலி கடலோர காவல் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பப்பூவா நியூகினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(இந்தோனேசியா)

பப்பூவா நியூகினியா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

சுமார் 6.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் சுனாமி எச்சரிக்கை குறித்த எந்தவித தகவலும் இதுவரை வெளியாகவில்லை. (நி)

# பாகிஸ்தானின் போர் நிறுத்த மீறலை அனுமதிக்க முடியாது - இந்தியா

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் போர் நிறுத்த மீறல் மற்றும் ஊடுருவல்களால் ஏற்படும் பாதிப்புகளை அனுமதிக்க முடியாது என இந்தியா தெரிவித்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட இந்தியா வெளியுறவுத் துறையின் ஆண்டறிக்கையில், சீன எல்லையான கிழக்கு லடாக்கில் இரு நாடுகள் இடையிலான பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை என்றாலும் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளையில் பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் நட்புறவை பேணுவதையே இந்தியா விரும்புவதாகவும் எல்லையில் ஊடுருவல் மற்றும் போர் நிறுத்த மீறல்களை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 2020 இற்குப் பிறகு எல்லைகளைத் திறக்கிறது சீனா

(பீஜிங்)

இன்று முதல் அனைத்து வகையான விசாக்களையும் வழங்குவதன் மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக தமது எல்லைகளை மீண்டும் திறக்கவுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

கொவிட்-19 தொற்று நோய் பரவலையடுத்து, சுமார் மூன்று வருடங்களின் பின்னர் முதல் முறையாக, சீனா தமது எல்லைகளை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு திறக்கவுள்ளது.

கடந்த மாதம் கொவிட்-19 இன் அண்மைய மீள் எழுச்சியை முறியடித்ததாக அதிகாரிகள் அறிவித்ததை தொடர்ந்து, கொவிட்-19 தொடர்பாக விதிக்கப்பட்ட எல்லைக் கட்டுப்பாடு நீக்கப்படுவதாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த 2020 மார்ச் 28 ஆம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட விசாவை வைத்திருக்கும் வெளிநாட்டினரும் அது செல்லுபடியாகும் திகதிக்குள் சீனாவிற்குள் நுழைய முடியும் என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் தமது குடிமக்களுக்கான ஆலோசனையை சீனா மீளப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட 22 ஆயிரம் பேருக்கு பொதுமன்னிப்பு



(டெஹ்ரான்)

ஈரானில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 22 ஆயிரம் பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிய சிரேஷ்ட தலைவர் அலி காமேனியால் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 82 ஆயிரம் பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் 22 ஆயிரம் பேர் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் கடந்த செப்டெம்பரில் குர்திஷ் இளம் பெண் மாஷா அமினி, அந்நாட்டின் பொலிஸ் காவலில் இருந்த போது உயிரிழந்ததையடுத்து, போராட்டங்கள் வலுப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஆரைக்கீரை/ நீராரை

Botanical Name - Marsilea Quadrifolia
Family - Marsileaceae

நீராரைக் கீரை நாவிற்கு சுவையைத் தரும். இது பித்த நோய்,சிறுநீர் அதிகம் கழிதல், மேக ரோகங்கள், நீரிழிவு முதலியவைகளைப் போக்கும். இதை நிழலில் உலர்த்திக் குடிநீர் செய்து பால், சர்க்கரை சேர்த்து உட்கொண்டு வரலாம்.

இது குறைந்தளவு நீரில் அதாவது 6,8 அங்குல உயரமுள்ள நீரில் வளரும் கொடி. நீருக்கு தரையில் படுக்கையாகவுள்ள சுமார் 3,4 மில்லி மீற்றர் பருமனுள்ள அடிக்கொடிகள் தரையோடு ஒட்டிப் பல மீற்றர் தூரம் நான்கு பக்கங்களிலும் படர்ந்து செல்லும். எல்லாக் கணுக்களிலுமிருந்து வேர் தோன்றிப் பூமியை பற்றிக் கொள்ளும். கிளைக் கொடிகள் எதுவுமில்லை. இக்கீரை மழை காலம் மாறி பனிக்காலம் ஆரம்பமாகும் போது நிறையக் கிடைக்கும்.

குளம்,குட்டை ,ஏரிக்கரை இது போன்ற இடங்களிலும் வயல் வரம்புகளிலும் பரம்பல் அதிகம். இது மிக்க சுவையுடையது. உடலை கற்பாத்திரம் போல் ஆக்கி ஆயுளை நீடிக்கச் செய்யும். எந்த நோயுள்ளவர்களுக்கும் இந்தக் கீரை ஏற்றது.

100 கிராம் ஆரைக் கீரையிலுள்ள சத்துக்கள்.

புரதம்-3.7 கிராம், கொழுப்பு-1.4 கிராம், நார்ப்பொருள்-1.3 கிராம், காபோவைதரேற்று-4.6 கிராம், கல்சியம்-5.3 கிராம், பொஸ்பரஸ்-9.1.

இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால் பித்தம் சம்பந்தமான எல்லா வியாதிகளும் குணமாகும்.

ஆகவே இந்த ஆரைக் கீரையை உணவாகவோ உலர்த்தி தேயிலை போல் வைத்துக் கொண்டு குடிநீர் தயாரித்து பாலுடன் சேர்த்து பருகி வந்தாலே பல நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்து நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யலாம்.

இக் கீரையை துவையல் அல்லது பருப்புடன் சேர்த்து கடைந்து சாப்பிடலாம். உடலுக்கு வன்மையையும் குளிர்ச்சியையும் கொடுக்கும். ஆரைக் கீரைகளை நிழலில் உலர்த்தி பொடித்து 50 கிராம் எடுத்து 500 மில்லி தண்ணீரில் போட்டு காய்ச்சிய பசுவின் பால் (200மி.லீ) பனங்கற்கண்டு சேர்த்து காலை, மாலை குடித்த வந்தால் சிறுநீர் அதிகளவு வெளியாதல், சிறுநீரில் இரத்தம் போதல், அதிக தாகம் நீங்கி உடலுக்கு ஆரோக்கியத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கும். ஆரைக் கீரைகளை நிழலில் பொடித்து ஒரு குப்பியில் அடைத்து வைத்துக் கொண்டு தினமும் இரவில் ஒரு தேக்கரண்டி அளவு காய்ச்சிய பால் 200 மில்லி இல் கலந்து கொடுக்க வெள்ளை சாய்தல் நீங்கும்.

உடலை பலப்படுத்தும் இந்தக் கீரைக்கு மனநோயை போக்கும் தன்மை உண்டு. அத ற்கு ஒரு பங்கு கீரைக்கு நான்கு பங்கு நீர் விட்டு கால்பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை பசுவின் பால், சர்க்கரை கலந்து குடிக்க மன அழுத்தம் குறையும். தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிடலாம்.

கண்நோய்கள் தொற்றிப் பரவும் காலத்தில் ஆரைக் கீரையை குடிநீராக்கி அதனால் கண்களை கழுவலாம்.

நீரிழிவு நோயாளிகள் இக் கீரை கிடைக்கும் காலங்களில் வாரத்தில் 3-5 நாட்கள் சமைத்து சாப்பிடலாம். அல்லது இக் கீரை கூடுதலாக கிடைக்கும் காலங்களில் காம்புடன் சேகரித்து நிழலில் உலர்த்தி, பொடித்து 1/2 தேக்கரண்டி அளவு காலை,மாலை ஆடை நீக்கிய பாலுடன் அருந்தலாம். இதே பொடியில் 2-4 கிராம் அளவு காலை, மாலை தேனுடன் எடுக்க நினைவாற்றல் அதிகரிக்கும்.

ஆரைக் கீரைச் சாற்றில் சின்னச் சீரகத்தை ஊற வைத்து சுவறி உலர்ந்ததும் பொடித்து தினமும் காலை,மாலை 2 கிராம் அளவு சாப்பிட்டால் இரத்த அழுத்த நோய், வயிற்றுப் புண் குணமாகும்.

ஆரைக்கீரை, வெண் தாமரைப் பூ இதழ்கள் இரண்டையும் சம அளவு எடுத்து அந்த அளவிற்கு 1/4 பங்கு ஏலக்காயை தட்டிப் போட்டு குடிநீர் காய்ச்சி குடித்து வந்தால் இதயம் பலம் பெறும்.

ஆரைக் கீரைச் சாற்றில் வெந்தயத்தை ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் காலை, மாலை இருவேளையும் 5 கிராம் அளவு சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

ஆரைக் கீரைச் சாற்றில் கருஞ்சீரகத்தை ஊற வைத்து உலர்த்தி, பொடியாக்கி தினமும் காலை, மாலை 1 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் தேமல், கரும்படை, படை போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

**ஆரைக் கீரை கோப்பிப் பொடி**

இலைக் காம்புடன் கூடிய ஆரைக் கீரைகளைப் பெற்று அவற்றை நிழலில் உலர்த்தி அம்மியில் அரைத்துத் தூள் செய்து போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டு தேவையான போது இந்தத் தூளில் 1 தேக்கரண்டி போட்டு 200 மில்லி கொதிநீர் கலந்து 10 நிமிடம் கழித்து கல்லாக்காரம் சேர்த்து குடித்து வர பித்த நோய்கள் தணிந்து உடல் குளிர்ச்சி அடையும்.

ஆரைக் கீரைச் சாறு 30 மில்லி எடுத்து ஒரு சிறு துண்டு தோல் நீக்கிய இஞ்சியைச் சேர்த்து அரைத்து நீர் கலந்து குடித்து வந்தால் செரியாமை, வயிற்றுப் பொருமல் நீங்கி குடல் பலம் பெறும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் 4 காம்புடன் கூடிய ஆரைக் கீரையை பிடுங்கி நன்கு கழுவி வாயில் போட்டு மென்று சாப்பிட்டுவர இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# தானும் நிலைமாறி வெங்காயச் செய்கையில் தடுமாற வைக்கும் காலநிலை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சந்தையில் விலைத் தளம்பல் ஏற்படுகின்ற போது சிறு வெங்காயத்தை அறவிலைக்கு விற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருந்து எமது விவசாயிகளை பாதுகாக்கும் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

காலநிலையின் பாதிப்பால் உற்பத்தியில் கணிசமான அளவு விழுக்காடு ஏற்படுகின்றபோது அதனை நிவர்த்திக்க வெளிநாடுகளிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்து நுகர்வோரை பாதுகாக்கும் அதேவேளையில் உற்பத்தியாளனின் முதலீட்டின் வீழ்ச்சியை தொடர்ந்து ஏற்படாதிருக்க அவர்களையும் பாதுகாக்கும் பொறிமுறையையும் வகுத்தல் தகும்.

இம்முறை மட்டுமல்ல இனி வருங்காலங்களிலும் இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படுவதனை தவிர்க்கவும் முடியாது. காலநிலை மாற்றம் என்பது எமது நாட்டுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல. அதனது தாக்கம் இப்போதெல்லாம் அதிகமாக எங்களூரில் உணரப்படுகின்றது.

இது அனைவருக்குமான சவால். எமது உற்பத்தியை பாதிக்கும் காரணிகளுள் முக்கியமானதாக கருதப்படும் காலநிலை மாற்றம், தவறிப் பெய்யும் மழை, அதிகரித்த காற்று வீச்சு, வளிமண்டலத்திலுள்ள அதிகரித்த ஈரப்பதன், இரவு நேரவெப்பநிலையில் வீழ்ச்சி என்பனவும் பூஞ்சண நோய்களின் தாக்கத்தை அதிகரிக்கவே செய்கின்றன.

காலத்தே பயிர்செய் என்னும் வேதவாக்கு தற்போது எந்தக் காலத்தில் எந்தப் பயிரை செய்வது என்னும் கேள்வியோடு வினவப்படுகின்றது.

காலபோகம், சிறுபோகம் என்பன மாறத் தொடங்கி விட்டன. இடைப்போகத்தில் விளைவிக்கின்ற பயிர்களுக்கு தேவையதிகமாக இருப்பதால் விலையும் அதிகமாக கிடைக்கும்.

ஒரு கிலோ சின்ன வெங்காயம் ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனையான காலம் மாறி தற்போது சடுதியாக குறைந்து புதிய வெங்காயம் சந்தைக்கு வரத் தொடங்கிய பின் இருநூற்றைம்பது மற்றும் முன்னூறு ரூபாவுக்கு குறைந்திருக்கின்றது. அதிகரித்த உள்ளீட்டுச் செலவு வெங்கயத்தின் விலைதளம்பி குறைந்துவிட்டால் ஈடுகட்ட முடியாமல் உற்பத்தியே நட்டமடையும் துர்ப்பாக்கிய நிலையை அடையநேரிடும். உற்பத்தியில் தளம்பலேற்படாமல் அதன் ஆதாயத்திலும் வீழ்ச்சி காணாமல் இருந்தால் மட்டுமே அடுத்த போகத்துக்கான உற்பத்திக்கு எங்களூர் விவசாயியினால் பங்களிக்க முடியும்.

காலநிலை மாற்றமுணர்ந்து பயிர்ப் பாதுகாப்பு சம்பந்தமான குறிப்பாக வெங்காய மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை பற்றிய விழிப்புணர்வினை தொடர்ந்தும் மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்கான வழிகளில் எமது துறை ஈடுபடும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெங்காயச் செய்கையில் முக்கியமான பிரச்சினையாக இருப்பது பூஞ்சண நோய்களாகும். அவற்றுள் குறிப்பாக நாற்றழுகல், ஊதாப் புள்ளி மற்றும் அழுகல், இலைத்தாள் சுருட்டி நோய், வெங்காய குழிழுழுகல் இவற்றைவிட மண்ணின் மேற்பரப்பில் கணு அழுகல், கறுத்த பூஞ்சணத் தொற்று என்பன முக்கியமானவையாகும். இவை தவிர்ந்து பக்ரீறியா நோய்க ளும் மேலும் ஊட்டச்சத்து குறைவால் ஏற்படும் நோய்க்குரிய குணங்குறிகளையும் இதில் உள்ளடக்கலாம். (தொடரும்)

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள்

## தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளினால் உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கடற்றொழிலாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டின் பின்னர் எல்லை தாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளினால் மீன் வளம் கொண்டு செல்லப்படுவதினால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களுக்கு கடல் உணவுகள் பிடிபடுவது மிகக் குறைவாக காணப்படுவதாகவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் கடலுக்கு சென்றாலும் மீன்கள் குறைவாக பிடிபடுவதனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து மிகக் குறுகிய தூரத்தில் இந்திய இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன. இது தொடர்பாக கடற்படையினர் முழுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.

இந்திய இழுவைப் படகுகளின் வருகைக்கு எதிராக கடந்த காலங்களில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களினால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு ஜனாதிபதி, அமைச்சர்களுக்கும் மனுக்கள் கையளிக்கப்பட்டும் இழுவைப் படகுகளின் வருகை கட்டுப்படுத்தப்படவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (4-6-350)

# மோ.சைக்கிள் விபத்து முதியவர் படுகாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி ஏ9 வீதியில் நேற்று காலை இடம்பெற்ற மோ.சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு அண்மையில் ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

ஏ9 வீதியை துவிச்சக்கர வண்டியில் கடக்க முற்பட்ட வேளை, வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதன்போது துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-100-315-316)



சாவகச்சேரி பாரதி பாலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத் தலைவர் சு.டினேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

# வன்னேரிக்குளம் வன்னொளி விளையாட்டு மைதானத்திலிருந்து வெளியேறியது இராணுவம்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வன்னொளி விளையாட்டு மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர்.


2009 ஆம் ஆண்டில் இருந்து வன்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். இதன் காரணமாக விளையாட்டுக் கழகத்தினால் முழுமையாக மைதானத்தினை பயன்படுத்துவதிலும் பொது நிகழ்வுகளை நடத்துவதிலும் நெருக்கடிகள் காணப்பட்டன.

கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு வழிவகுக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகளும் மனுக்களும் கையளிக்கப்பட்ட நிலையில் தற்போது வன்னொளி விளையாட்டு மைதானத்தில் இருந்து முழுமையாக வெளியேறி உள்ளனர். (4-6-350)

## பொருளாதார நெருக்கடியால்

# வீட்டுத்திட்டங்களை நிறைவு செய்ய முடியவில்லை

## பயனாளிகள் கவலை



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் தற்போதுள்ள பொருட்களின் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் தமக்குரிய வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ளதாக வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வை அடுத்து பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரிப்பு, தொழிலாளர் மற்றும் கூலி ஆட்களின் கூலித்தொகை அதிகரிப்பு என்பன காரணமாக வீட்டுத்திட்ட பயனாளிகள் தமக்கான வீட்டுத்திட்டங்களை பூரணப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முதியவர்களை கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளை கொண்ட குடும்பங்கள் இவ்வாறான நெருக்கடிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அரச வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டாலும் அவற்றை பூரணப்படுத்த முடியாமல் தொடர்ந்தும் தற்காலிக வீடுகளிலேயே வாழ வேண்டிய அவல நிலை தொடர்வதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-315)

# மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு நோயாளர்கள் பெரும் பாதிப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியர்கள் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

நேற்று வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சைகள் இடம்பெறவில்லை. அத்தியாவசிய சிகிச்சைகள் மற்றும் அவசர சிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் சிகிச்சைக்காக வருகை தந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றதுடன், அரசாங்கத்தை கடுமையாக சாடினர். (4-6-100)

# மணல் அகழ்வு, போதைப் பாவனையை கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற போதைப் பொருள் பாவனை மற்றும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் முதலாவது மீளாய்வு கூட்டம் நேற்று மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்று வருகிறது.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது தொடர்ந்து தெரிவிக்கையில் மாவட்டத்திலே போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக உணவு, பாதுகாப்பு வேலை திட்டங்களை முன்னெடுத்தல், சட்டவிரோதமான மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்தல் மற்றும் கல்வி சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்ட அவர் விவசாயிகளிடமிருந்து தனியார் மிகக் குறைந்த விலைகளிலே நெல்லை கொள்வனவு செய்து வந்த நிலையில் அரசின் கொள்கைகளுக்கு அமைவாக ஒரு கிலோ நெல்லின் விலை நூறு ரூபாய் என்ற அடிப்படையில் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து இலட்சத்து 85 ஆயிரத்து 832 கிலோ கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை 30 ஆயிரத்து 171 குடும்பங்களுக்கு அரிசியாக்கி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 124

# வினை விதைத்தவன் வினை அறுப்பான்

வசதி வாய்ப்புக் குறைந்த இடத்தில் வாழ்ந்து வந்த இளைஞன் ஒருவன் தனது அம்மாவை நன்றாக பார்க்க வேண்டும் என்பதற்காக உழைப்புத் தேடி நகர்ப்புறத்திற்கு சென்றான். எங்கு தேடியும் வேலை கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு முதலாளி அந்த பையனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். முதலில் எந்த வேலையும் கொடுக்கவில்லை.

பிறகு ஒரு நாள் முதலாளி ஒரு எருமை மாட்டுத் தோலை அவனிடம் கொடுத்து விட்டு நான்கு கோணிப் பைகளை எடுத்துக் கொண்டு ஒட்டகத்தில் புறப்படு போகலாம் என்றார். இவன் ஏன் எதற்கு என்று கேட்கவில்லை. முதலாளி கூப்பிடுகிறார் சரி என்று புறப்பட்டான்.

இரண்டு பேரும் சேர்ந்து அந்த ஒட்டகத்தில் ஏறிக் போய்க் கொண்டே இருந்த வேளை ஒரு பெரிய செங்குத்தான மலை அருகே ஒட்டகத்தை நிறுத்தி இருவரும் இறங்கினார்கள்.

அவர் சொன்னார் இதோ பாருப்பா இந்த எருமை மாட்டுத் தோலை விரித்து அதிலே படுத்துக் கொள் என்றார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் முதலாளி சொல்கிறார் என்று படுத்து கொண்டான். உடனே அவர் அந்த எருமை தோலை நான்கு பக்கமும் எடுத்து ஒன்றாக்கி ஒரு கயிற்றினாலே கட்டிவிட்டு அருகில் இருந்த ஒரு மரத்துக்கு பின்னால் ஒளிந்து கொண்டார். அங்கே அவர் கட்டிப்போட்டது ஒரு எருமை மாடு மாதிரி தெரிந்தது. சிறிது நேரத்தில் இரண்டு பெரிய கழுகுகள் அங்கே பறந்து வந்தன. அந்த எருமை தோல் மூட்டையை அப்படியே தூக்கி கொண்டு உயரப் பறந்து போய் அந்த செங்குத்தான மலை உச்சியில் போட்டுவிட்டு அலகால் கொத்தின. உள்ளே இருந்து ஒரு பையன் வெளியே வருவதை பார்த்ததும் அந்த கழுகுகள் பயந்து ஓடிவிட்டன. அந்த பையன் அங்கே பார்க்கிறான் அவன் காலடியில் ஏராளமான நவரத்தினங்கள் கொட்டிக் கிடந்தன. கீழே நின்று கொண்டிருந்த முதலாளி ஏன் சும்மா நின்று கொண்டிருக்கிறாய். உன் காலடியில் கிடக்கிற கற்களைப் பொறுக்கி கீழே போடு என்றார். அவன் போட ஆரம்பித்தான்.

முதலாளி நான் எப்படி கீழே இறங்கி வருவது என்று கேட்டான். நீ முதலில் போடு அப்புறம் அதற்கு வழி சொல்கிறேன் என்றார். நான்கு சாக்கும் நிரம்பியது. சேர்த்துக் கட்டி ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிக் கொண்டு மேலே பார்த்து முட்டாளே என் வேலையாட்களுக்கு எப்படி வேலை கொடுக்கிறேன் என்பது புரியவில்லையா? அந்த மலை உச்சியில் பின்னால் திரும்பிப் பார் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது புரியும் என்று சொல்லி விட்டு போய்விட்டார்.

திரும்பிப் பார்த்தால் அங்கு ஏராளமான எலும்புக்கூடுகள். ஏமாந்து போய்விட்டோம் என்பதை புரிந்து கொண்டான். ஒரு கழுகு தலைக்கு மேலே பறந்து வந்ததை அவதானித்தவன் சாமர்த்தியமாக ஒரே தாவலில் அதன் காலை பிடித்துக் கொண்டான். கழுகு பயந்துபோய் மேலே பறந்தது. கடைசியில் களைத்துப் போய் கீழே இறங்கத் தொடங்க இவன் தரையில் குதித்து தப்பித்துக் கொண்டான். கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் பழைய முதலாளியிடம் போய் வேலை கேட்டான்.

அவருக்கு ஆச்சரியம் இவன் எப்படி தப்பித்தான் என்று இருந்தாலும் இவன் வேற யாரோ அவன் சாயலில் இருக்கிறான் என்று நினைத்து வேலையில் சேர்த்துக் கொண்டார். இரண்டு நாட்கள் கழித்து வழக்கம் போல நாலு சாக்கு எடுத்துக் கொண்டு அவனையும் அழைத்துக்கொண்டு அந்த மலைப் பக்கம் போனார்.

எருமை தோலை தரையில் விரித்து படுக்க சொன்னார். உடனே இவன் புத்திசாலித்தனமாக முதலாளி எனக்கு எப்படி படுப்பது என்று தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் படுத்துக் காட்டினால் நன்றாக இருக்கும். அவரும் எதார்த்தமாக இதுகூட தெரியவில்லையா? என்று சொல்லிக் கொண்டு அதில் படுத்தார். அவ்வளவுதான் உடனே அவன் திடீரென்று அப்படியே சுருட்டி கட்டிவிட்டான். கொஞ்ச நேரத்தில் வழக்கம் போல் இரண்டு கழுகுகள் வந்து தூக்கிக் கொண்டு போய் அந்த நவரத்தின மலை உச்சியில் போட்டன. மூட்டையை பிரித்து முதலாளி வெளியே வந்தார்.

கீழே இருந்து பையன் கத்தினான். நேரத்தை வீணாக்காதீங்க. ரத்தினக் கல்லை எல்லாம் பொறுக்கி கீழே போடுங்க என்றான். அவருக்கு புரிந்து போனது இவன் பழைய ஆள் தான்.

சரி சரி மலை உச்சியில் இருந்து எப்படி கீழே இறங்கி வந்தாய். அதைச் சொல் முதலில் என்றார்.

முதலில் ரத்தினக் கல்லை பொறுக்கி கீழே போடுங்கள் அப்புறம் சொல்கிறேன் என்றான். வேற வழியில்லை பொறுக்கிப் போட்டார். நான்கு சாக்குகளிலும் கட்டிக்கொண்டு ஒட்டகத்தில் ஏறி புறப்பட தப்பித்தது எப்படி என்பதைச் சொல்லாமல் போகிறாயே என்று முதலாளி கத்தினான். உங்களுக்குப் பின்னால் இருக்கிற எலும்புக்கூடுகளினை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

இது ஒரு துர்க்மெனிய நாட்டு கதை.

# வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் ஒன்றுதிரண்ட மக்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மத்திய அஞ்சல் பரிவர்த்தன நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்பு ஆடைகளை அணிந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (நி)



# ஆளுநர்களை கொழும்புக்கு அழைத்துள்ள பிரதமர்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து கலந்துரையாட மாகாண ஆளுநர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடித்து பிரதமரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளமையினால் உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலை நடத்தாமைக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

9 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாததன் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி தேசிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சுனில் ஹந்துன்நெத்தி, நிஹால் அபேசிங்க ஆகியோரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிவாதிகளாக நிதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட 35 பேர் பெயரிடப்பட்டுள்ளனர். (நி)

# ரயில் திணைக்கள ஊழியர்களின் விடுமுறைகள் உடன் அமுலாகும் வகையில் இரத்து

(கொழும்பு)

இலங்கை ரயில்வேயின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே அத்தியட்சகர் தெரிவித்தார்.

ரயில்வே தொழிற்சங்கம் 24 மணி நேர வேலை நிறுத்தத்தை அறிவித்ததை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புதிய வரிக் கொள்கை மற்றும் பல பிரச்சினைகளுக்கு எதிராக பல தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் பாரிய வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. (நி)

# சாட்சி வழங்கச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

(கொழும்பு)

நீதிமன்றத்திற்கு சாட்சி வழங்கச் சென்ற ஒருவர் நீதிமன்ற வளாகத்தில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் வெலிமடையில் பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை நீதிமன்றத்தின் நுழைவாயில் அருகில் குறித்த நபர் மயங்கி வீழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அருகிலிருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் அனுமதித்த போதிலும், அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கம்பளையில் இருந்து நீதிமன்றத்திற்குச் சென்ற 62 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வெலிமடை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 127





"சக்கரவர்த்தி! இளவரசரைக் கேட்டால், பழுவூர்த்தேவரைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார். பழுவூர்த்தேவரோ இளவரசரைக் கேட்க வேண்டும் என்கிறார். இரண்டு பேருக்கும் நடுவில் என் கோரிக்கை"

"பிள்ளாய்! நீ கவலைப்படாதே! இரண்டு பேரையும் சேர்த்து வைத்துக் கொண்டே கேட்டுவிடலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, "தளபதி! இளவரசனிடமிருந்து இந்தப் பிள்ளை ஓலை கொண்டு வந்தான். பழையபடி காஞ்சிக்கு நான் வர வேண்டும் என்று தான் ஆதித்தன் ஓலையில் எழுதியிருக்கிறான். அங்கே புதிதாய்ப் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். அதில் நான் சில நாட்களாவது தங்க வேண்டுமாம்!" என்றார்.

"தங்கள் சித்தம் எப்படியோ, அப்படியே செய்கிறது!" என்றார் கோட்டைத் தளபதி.

"ஆ! என்னுடைய சித்தம் எப்படியோ அப்படி நீர் நடத்துவீர். ஆனால் என் கால்கள் மறுக்கின்றன. காஞ்சிக்குப் பிரயாணம் செய்வது இயலாத காரியம். அரண்மனைப் பெண்டுகளைப் போல் பல்லக்கில் ஏறித் திரைபோட்டுக் கொண்டு யாத்திரை செய்வதென்பதை நினைத்தாலே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. ஆதித்த கரிகாலனை இங்கே வந்து விட்டுப் போகும்படிதான் மறு ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்"

"இளவரசர் இச்சமயம் காஞ்சியை விட்டு இங்கு வரலாமா? வடதிசையில் நம் பகைவர்கள் இன்னும் பலசாலிகளாக இருக்கிறார்களே!"

"பார்த்திபேந்திரனும் மலையமானும் அங்கிருந்து பார்த்துக் கொள்வார்கள். இளவரசன் இச்சமயம் இங்கே என் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ சொல்கிறது. அது மட்டுமல்ல; ஈழ நாட்டுக்குச் சென்றிருக்கும் இளங்கோவையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைப்பு அனுப்ப வேண்டும். இரண்டு பேரையும் வைத்துக் கொண்டு ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய விரும்புகிறேன். அருள்மொழி இங்கு வரும்போது ஈழப் படைக்கு உணவு அனுப்புவது பற்றி உங்கள் ஆட்சேபத்தையும் அவனிடம் தெரிவிக்கலாம்"

"சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும். ஈழத்துக்கு உணவு அனுப்புவதை நான் ஆட்சேபிக்கவில்லை. தனதான்யாதிகாரியும் ஆட்சேபிக்கவில்லை. சோழ நாட்டுக் குடிமக்கள் ஆட்சேபிக்கிறார்கள். சென்ற அறுவடையில் சோழ நாட்டில் விளைவு குறைந்து விட்டது. நம்முடைய மக்களுக்கே போதாமலிருக்கும் போது, இலங்கைக்குக் கப்பல் கப்பலாக அரிசி அனுப்புவதை மக்கள் ஆட்சேபிக்கிறார்கள்! தற்போது வாய்க்குள் முணுமுணுக்கிறார்கள். கொஞ்ச நாள் போனால், மக்களின் கூச்சல் பலமாகும். தங்கள் உடல் நிலையைப் பாதிக்கும்படி இந்த அரண்மனைக்குள்ளேயும் அவர்களுடைய கூச்சல் வந்து கேட்கும்!"

"குடிமக்கள் ஆட்சேபிக்கிற காரியத்தைச் செய்ய அருள்மொழி ஒரு நாளும் விரும்பமாட்டான். எல்லாவற்றுக்கும் அவன் ஒரு தடவை இங்கு வந்து விட்டுப் போகட்டும். பெரிய பழுவேட்டரையர் வந்ததும் இலங்கைக்கு ஆள் அனுப்புவது பற்றி முடிவு செய்யலாம். அவர் எப்போது திரும்புகிறார்?"

"இன்று இரவு கட்டாயம் வந்து விடுவார்!"

"காஞ்சிக்கும் நாளைய தினம் ஓலை எழுதி அனுப்பலாம். இந்தப் பிள்ளையினிடமே அந்த ஓலையையும் கொடுத்தனுப்பலாம் அல்லவா?"

"இந்தச் சிறுவன் காஞ்சியிலிருந்து ஒரே மூச்சில் வந்திருக்கிறான். சில நாட்கள் இவன் இங்கேயே தங்கி இளைப்பாறி விட்டுப் போகட்டும். வேறு ஆளிடம் ஓலையைக் கொடுத்தனுப்பலாம்."

"அப்படியே செய்க. இளவரசன் வருகிற வரையிலே கூட இவன் இங்கேயே இருக்கலாம்!"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விலங்குகள் பேசுவது புரிந்தால்

(நேற்றைய தொடர்ச்சி)



ஏன் சிரிக்கிறீர்கள், என்று கேட்டாள் அரசி. ஒன்றும் இல்லை என்று வழக்கம் போல மழுப்பினான் அவன்.

உண்மையைச் சொல்லுங்கள். என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனிமேல் உங்களுடன் பேச மாட்டேன். என் மீது உயிரையே வைத்திருப்பதாக நீங்கள் சொன்னதெல்லாம் நடிப்பு, என்று கோபத்துடன் சொன்னாள் அவள்.

என் உயிருக்கும் மேலாக நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். நான் சிரித்ததற்கான காரணம் மட்டும் கேட்காதே என்றான் அவன்.

நீங்கள் சொல்லித் தான் ஆக வேண்டும், என்று வற்புறுத்தினாள் அவள்.

உண்மையைச் சொன்னால் என் உயிர் போய் விடும் என்றான் அவன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் சிரித்ததற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும், என்று அடம்பிடித்தாள் அவள்.

என்ன செய்தாலும் தன் மனைவியைச் சமாதானப்படுத்த முடியாது என்று உணர்ந்தான் அவன்.

என் உயிரை விட உனக்கு நான் சிரித்ததற்கான காரணம் தெரிய வேண்டும். நாளை மாலையில் உனக்கு அந்த உண்மையைச் சொல்கிறேன். அப்படியே என் பிண ஊர்வலத்துக்கும் ஏற்பாடு செய்து வை என்று வருத்தத்துடன் சொன்னான் அவன்.

பொழுது விடிந்தது. வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவ வந்தான் அவன். மாலையில் இறக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் சோகமாக இருந்தான். அரண்மனை முழுவதும் அரசன் இறக்கப் போகும் செய்தி பரவி இருந்தது.

உலாவிக் கொண்டிருந்த அவன் பின்னால் வளர்ப்பு நாய் சோகமாக வந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில் அரண்மனைச் சேவல், பெட்டைக் கோழிகள் சூழ ஆரவாரமாக உலாவிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்த நாயால் கோபத்தை அடக்க முடியவில்லை. ஏ! சேவலே! உனக்குச் சிறிது கூட நன்றி கிடையாதா? நமக்கு இவ்வளவு காலம் உணவு அளித்துக் காப்பாற்றியவர் இந்த அரசர். இன்று மாலை இவர் இறக்கப் போகிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் அறிவிற்கு அழகு
பொறுமை திறமைக்கு ஏற்றது
– கவி காவிதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்களைக் கண்காணிக்கும் பெரும் பொறுப்பை கைவிடாதீர்கள்

மாணவர் சமூகத்தைச் சீரழிக்கும் மிகப் பெரும் கயமைத்தனம் நம்மண்ணில் நடந்தாகிறது.

குறிப்பாக போதைப்பொருள் வியாபாரிகள் தங்களின் போதை வியாபாரத்தை விஸ்தரிக்கும் நோக்கில் மாணவர்களிடையே போதையைப் பழக்குகின்ற கொடுமையைச் செய்து வருகின்றனர்.

இந்த மோசமான சூழ்நிலையில் இருந்து எங்கள் மாணவர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் ஆசிரியர்களின் வகிபங்கு மிகவும் முக்கியமானது.

இருந்தும் இன்றைய சூழலில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான இடைவினை அதிகரித்து வருவது தெரிந்ததே.

மாணவர்களைத் தண்டிக்கின்ற ஆசிரியரை கைது செய்கின்ற நடைமுறை என்று ஆரம்பமாகியதோ அன்றிலிருந்து நமக்கேன் தேவையில்லாத வம்பு. மாணவர்கள் எக்கேடு கெட்டாலும் அதுபற்றிப் பரவாயில்லை. நம் கடமை படிப்பித்தல். அதைச் செய்து விட்டு போய்விட வேண்டும் என்று நினைக்கின்ற மனநிலையில் ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

இதன் காரணமாக மாணவர்களின் பிரச்சினைகளை இனங்காண்பதிலோ அன்றி மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களை ஆற்றுப்படுத்துவதோ நடப்பதாக இல்லை.

இந்நிலையில் படிப்பதில் இடர்படுகின்ற மாணவர்கள், பாடசாலையும் வீடும் என்ற குறுகிய வட்டத்துக்குள் சீவிக்கும் பிள்ளைகள், எந்நாளும் படி, படி என்ற பெற்றோர்களின் அழுத்தத்துக்கு உட்பட்டு உளநெருக்கீட்டுக்கு ஆளாகும் மாணவர்கள், குடும்ப வறுமையால் துவண்டுபோகும் சிறார்கள் என எவரையும் இனங்காண மறுக்கின்ற ஆசிரியர்கள் இருப்பார்களாயின், அதன் விளைவு மிகவும் மோசமானதாக இருக்கும்.

எனவே வகுப்பறையில் இருக்கக்கூடிய அத்தனை மாணவர்களையும் அறிந்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு அதற்குரிய பரிகாரங்களைத் தேடுவது வகுப்பாசிரியர்களதும் அந்த வகுப்பில் பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களதும் கடமையாகும்.

இந்தப் பணியை நம் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் செய்வார்களாயின், அதை விட்ட புண்ணியம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

உண்மை. மாணவர்களிடத்திலிருந்து ஆசிரியர்கள் அந்நியப்படும்போது, தங்களின் பிரச்சினைகளை யாரிடம் கூறுவது எனத் தெரியாமல் மாணவர்கள் அந்தரப்படுகின்றனர்.

தாங்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை ஆசிரியர்களிடம் கூறி, அதற்குத் தீர்வு காணும்போது அந்த மாணவர்கள் அப்பிரச்சினையில் இருந்து மீளஎழுகின்றனர்.

எனவே எங்கள் மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரையும் இனங்கண்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அதற்குப் பரிகாரம் தேடும்போது அந்த மாணவர்கள் இந்த மண்ணில் நின்று நிலைத்து வாழ்வர் என்பதால், அந்தப் பணியை ஆசிரியப் பெருமக்கள் தவறாது செய்துதவ வேண்டும்.

# கல்வியை சீரழிக்கும் தொழிற்சங்க நடவடிக்கை தேசத்துரோகமாகும்

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் வகையில் செயற்பட்டு அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதானது தேசத்துரோகமாகும்.

இதனை நாம் தேசிய குற்றமாகவே கருதுகின்றோம். எனவே மாணவர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்று அதிபர், ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்வதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்கள் இன்று அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது. இது தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் தாமதமடைந்துள்ளமையால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் கல்வி அமைச்சரால் அமைச்சரவைக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி சீர்குலையும் வகையில் கடந்த காலங்களில் எந்தவொரு ஆசிரியர்களும் இவ்வாறான தீர்மானங்களை எடுக்கவில்லை. ஆனால் அண்மைக்காலமாக சில அரசியல் குழுக்கள் நியாயமற்ற நிபந்தனைகளை முன்வைத்து ஆசிரியர்களை ஆர்ப்பாட்டங்களுக்கும் அழைத்துச் செல்கின்றன.

இது துரதிஷ்டவசமான செயற்பாடாகும். அரச வருமானத்தை அதிகரிப்பதற்காகவே வரி அதிகரிக்கப்பட்டது. இது அரசாங்கம் விருப்பத்துடன்மேற்கொண்ட தீர்மானமல்ல.

எனவே நிலைமையைப் புரிந்து கொண்டு உரிய நேரத்தில் தேசிய பரீட்சைகளை நடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு அதிபர், ஆசிரியர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இவற்றை மீறி அதிபர் ஆசிரியர்களால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமானால் அது தேசத்துரோகமாகும்.

இதனை தேசிய குற்றச் செயலாகவே நாம் காண்கின்றோம் என்றார். (ம-7)

# பணிப் புறக்கணிப்பில் ஈடுபடமாட்டோம் ரயில்வே தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

நாடுமுழுவதும் இன்று நடைபெறவுள்ள அடையாள வேலைநிறுத்தத்தில் தமது அங்கத்தவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என இலங்கை ரயில்வேயின் பல தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய ரயில்வே தலைமை அதிகாரி டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க, துறை சார்ந்த அனைத்து தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

ரயில்வே காவலர்கள் சங்கம், ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கம், ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் மற்றும் பல தொழிற்சங்கங்கள் வேறுவிதமாக முடிவெடுக்கும் போது, லோகோமோட்டிவ் இன்ஜின் ஆபரேட்டர்கள் கூட்டு தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர். (ம-9)

## மாணவர்களை கொடூரமாக தாக்கிய 4 ஆசிரியர்கள் கைது

(கண்டி)

மாணவர்களை கொடூரமாக தாக்கிய 4 ஆசிரியர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, பொக்காவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனியார் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் சிறுவர், சிறுமியர் குழுவொன்றை பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர் விடுதியில் வைத்து தாக்கிய சம்பவம் தொடர்பில் கண்டி பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து இப்பாடசாலையின் நான்கு ஆசிரியர்கள் மற்றும் இரண்டு விடுதி கண்காணிப்பாளர்கள் சிறுவர் பணியகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் விசாரணையில், இந்த தனியார் பள்ளியின் விடுதியில் ஒழுக்கக் காரணங்களுக்காக 5 பெண்கள் மற்றும் 5 சிறுவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்படவுள்ளனர். (ம-9)

## ஊழல் தடுப்பு மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

ஊழலுக்கு எதிரான சட்ட வரைவை அரசாங்க வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** அச்சுவேலி தொழிற் பேட்டை- எண்ணெய் தொழிற்சாலை, அச்சுவேலி தொழிற் பேட்டை, ஜான்ட்ரா மெஷ் இண்டஸ்ட்ரியல் பி.வி.ரி, பெரிய பொக்கணை, வாதரவத்தை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## யாழில் கருவாடு விற்பனை நிலையத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்நகரப்பகுதியில் அமைந்துள்ள கருவாடு விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு திருட்டுசம்பவம்ஒன்று இடம்பெற்றுள்ளதாக கடை உரிமையாளரினால் யாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வழமை போல் வியாபாரத்தை முடித்து விட்டு கடை உரிமையாளர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

நேற்றுக் காலை வந்து பார்த்தபொழுது கூரை உடைக்கப்பட்டு, கருவாடு திருட்டுப் போய் உள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் 30 ஆயிரம் ரூபாய் பணமும் பணப் பெட்டியில் இருந்து காணாமல் போய்விட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய உறவை வலுவாக்க பொருளாதார ஒருங்கிணைப்பு அவசியம்

## இந்தியாவிற்கான உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு



(டில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தற்போது காணப்படும் உறவுகளை விசேடமானதாக மாற்றுவதற்கு பொருளாதார ஒருங்கிணைப்பு அவசியமானதுஎன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்தார். அண்மையில் இந்தியா வின் இராணுவக் கல்லூரியில் இந்திய இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்தியாவுக்கு இடையில் வர்லாற்று முக்கியத்துவம் வாய்ந்த உறவுகள் வரை தற்போதைய விசேடமான உறவுகள் வரை சுட்டிக் காட்டிய மிலிந்த மொரகொட, இரு நாடுகளுக்கும் இடையிலான உற்வுகளில் மூலோபாய முக்கியத்துவம் தொடர்பாகவும் வலியுறுத்தினார். இலங்கை-இந்தியாவுக்கு இடையில் உயிர்த்துடிப்பான உறவு தொடர்பாக மேலும் விபரித்த அவர், இலங்கையில் நெருக்கடிமிக்க காலகட்டத்தில் 4 மில்லியன் டொலர் உதவியை வழங்கியதன் மூலம் இந்தியா ஆற்றிய முக்கிய பங்களிப்பை நினைவு கூர்ந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான பாதுகாப்பு ஒத்துழைப்பு, இந்தியா தொடர்ந்தும் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கும் பயிற்சிகள் தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதன்படி. நேற்றைய அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 319.84 ஆகவும். விற்பனை பெறுமதி 335.68 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து டொலர் மற்றும் ஏனைய முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான ரூபாயின் மதிப்பு உயர்ந்து வந்திருந்தது.

இருப்பினும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு மீண்டும் சரிந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலை மேலும் குறைவடையும்

## அமைச்சர் நளின் பெர்னான்டோ

**(கொழும்பு)**

**எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் குறையும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.**

ரூபாவின் பெறுமதி அதிகரிப்பால் தற்போது இறக்குமதியாளர்களுக்கு பாதகமான நிலை ஏற்பட்டாலும் டொலர் பெறுமதி வீழ்ச்சியின் பயனை பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என இறக்குமதி யாளர்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நேரத்தில். இறக்குமதியாளர்கள் நட்டத்தை சந்தித்துள்ளனர். இதேவேளை வியாபாரிகளும் நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

இதன் காரணமாக இறக்குமதியாளர்கள் பொருட்களுக்கான விலையை குறைத்து வழங்குகின்றனர்.

விலை ஏறும் போதும் விலை குறையும்போதும் இந்த நிலையை சந்திக்க வேண்டியுள்ளது என்ற போதும் இதன் நன்மையை வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டும்.

கடந்த வாரம் சர்க்கரை, வெங்காயம், பருப்பு, கிழங்கு என்பவற்றின் விலைகளும் குறைந்துள்ளன.



எனவே பண்டிகைக் காலத்தில் மேலும் விலைகள் குறைந்து நுகர்வோர் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2784

### யனனி

எனக்கென்னவோ எங்க அம்மா செய்யுற லட்டுக்காக தான் என் பின்னாடி சுத்துறியோனு தோனுது..



தோன்றதெல்லாம் இல்ல... அதுதான் உண்மை!

### அம்பிகா

தினமும் சூரிய உதயத்திற்கு முன்பே எழுந்தால் சகல செல்வங்களும் தேடிவரும்-

அப்படியென்றால் நியூஸ்பேப்பர் போடுபவர் BMW காரில் அல்லவா சுற்றவேண்டும்!!!

### ரொபின்சன்

வல்லாரை சாப்பிட்ட ஞாபக சக்தி அதிகரிக்குமாம்... போன மாசம் வல்லாரை சாப்பிட்டன் அது மட்டும் தான் ஞாபகத்தில் இருக்குது மத்ததெல்லாம் மறந்து போச்சு....



### மதுசன்

உலகத்தில கஷ்டமான விசயம் எதுன்ன... நமக்கு யாராவது அட்வைஸ் பண்றப்ப வர்ற சிரிப்பை அடக்கிட்டு சீரியஸா மூஞ்சியை வைச்சிருக்கிற மாதிரியே நடிக்கிறது தான்...



### ருமேக்கா

புருசன் பொண்டாட்டிய அடிச்சா நியூஸ் பேப்பரில வருது...



பொண்டாட்டி புருசன அடிச்சா ஜோக்கில மட்டும் தான் வருது... நல்லாருக்குயா உங்க டீலிங்கு

### மிதுனா

டாக்டர், வயிற்று வலி என்னால பொறுக்க முடியல



வயிறு வலிக்கும் போது நீங்க ஏன் பொறுக்கப் போறிங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில்...

இவரது மனைவி கொழும்பில் வசித்து வரும் நிலையில் இவர் வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ம-7,33,104)

## 52 நாட்களான...

ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இதில் மணற்காடு, குடத்தனையைச் சேர்ந்த 52 நாட்களான ஆண் குழந்தையே உயிரிழந்ததாகும்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு குழந்தை மூச்சயற்ற நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்துள்ளது.

வைத்தியசாலைக்கு சென்ற தும்


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1514
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 5 1 0 4 3 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.03.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1089
Q 04 14 21 59
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 3301
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
X 13 22 30 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1407
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Y 14 53 58 62 63

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 368
வெற்றி இலக்கங்கள்
துலாம் 13 44 49 53 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 5059
U 5 1 4 9 8 2
தேசிய லொத்தர் சபை


பளை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா விஞ்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## உள்ளூராட்சி...

மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடாதிபதி வரகாகொட ஸ்ரீ ஞானரதன மகான தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தின் விபரம் வருமாறு, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும், பொதுமக்களின் துன்பங்களைக் குறைக்கவும், சமூக அமைதியின்மையைப் போக்க் முறையான கொள்கைப் பொறிமுறையைத் தயாரிக்கவும் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது பொது மக்களிடையே சற்றுக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயகத்தை பாதுகாப்பது என்பது சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் மூலம் மக்களின் இறையாண்மையை உறுதிப்படுத்துவது என்பது ஜனநாயகத்தலைவராக அங்கீகரிக்கப்பட்ட உங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

எனவே, உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துவது அரசின் பொறுப்பு.

'நாட்டில் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் நடத்தும் போராட்டங்கள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உறுதியற்ற தன்மையை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படக்கூடாது.

மேலும், நாட்டின் சட்ட எல்லைகளுக்கு உட்பட்டு சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் உரிமை பொதுமக்களுக்கு இருக்க வேண்டும்.

எனவே, அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி, சட்டத்தின் மேலாதிக்கத்தைப் பெற்று மக்களின் வாழ்க்கையை படிப்படியாக மீட்டெடுக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாடு முழுவதும்...

தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் இன்றைய தினத்தை பணிப் பகிஷ்கரிப்பு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

அரச, அரச அனுசரணை பெற்ற பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்த பணிப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அரச வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள், மின்சார பொறியியலாளர்கள், வங்கிச் சேவை ஊழியர்கள், பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள், வீதி அபிவிருத்தி, கல்வி நிர்வாகம், நில அளவை திணைக்களம், வருமான வரி உள்ளிட்ட 47 தொழிற் சங்கங்களை சேர்ந்த தொழிற்சங்க கூட்டமைப்பினர் பணிப்பகிஷ்கரிப்பில் பங்கேற்கவுள்ளனர். முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள வரி திருத்தப்பட வேண்டும் என்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக அமைந்துள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிக வருமானம் பெறும் அனைவரிடமிருந்தும் 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரியை அறிவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமையினால், தொழிற்சங்கத்தினர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் பல கோரிக்கைகளை முன் வைத்து பல அரச அனுசரணை பெற்ற தொழிற்சங்கத்தினரும் பணிப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

வங்கி வட்டி வீதத்தை குறைத்தல், 25,000 ரூபாய்க்கு வாழ்க்கைச் செலவு நிவாரணத்தை வழங்குதல், மின்சாரக் கட்டணத்தை குறைத்தல், ஓய்வூதியக் குறைப்பை உடனடியாக நிறுத்துதல் உள்ளிட்டவை இவர்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது. அதிபர், ஆசிரியர், தாதியர், சுகாதாரச் சேவை, தபால், அரச முகாமைத்துவ சேவைகள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்களும் இன்றைய பணிப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ம-7)

## போராளிக்கு...

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளி, வெள்ளவத்தையில் உள்ள முகவரிக்கு போலி ஆவணங்களை உருவாக்கி வெளிநாடு செல்வதற்கு சந்தேகநபரான கான்ஸ்டபிள் உதவியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து நாட்டிற்கு வந்தபோது கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிள் கெசல்வத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## பொதுப்...

சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

புகையிரத தொழிற்சங்கப் போராட்டத்தினால் பொதுப் போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தூர பிரதேசங்களுக்காக மேலதிகமாக இன்று அதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கைபோக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க போவதில்லை. மாத வருமானம் பெறும் அரச ஊழியர்களால் போராட்டத்தில் ஈடுபட முடியும், ஆனால் நாட்கூலி பெறும் தரப்பினரால் போராட்டத்தில் ஈடுபட முடியாது.

தற்போது நாங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் அடுத்த மாதம் புத்தாண்டு காலத்தில் பிச்சை எடுக்க நேரிடும். ஆகவே வழமைக்கு மாறாக இன்றைய தினம் அதிக பேருந்துகளை சேவையில் ஈடுப்டுத்துவோம் என இலங்கை தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (ம-7)

## பாடசாலைகள்...

க்கங்களும் ஒன்றிணைந்து இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ள நிலையில் குறித்த போராட்டத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இன்று சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2034
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.14
தினம் செவ்வாய்க்கிழமை
H 05 15 34 67
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,078,400/-
DLB

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.14
சீட்டிழுப்பு இல : 4195
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,969,640/-
வெற்றி இலக்கங்கள்
24 33 43 49 B
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 300
சீட்டிழுப்பு திகதி 2023.03.14
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
15 40 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,036,740/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,235,466/-
திகதி 2023-03-14
வெற்றி வாரம் 3746
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
29 45 57 60
கும்பம்
2533
694
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,984,000/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 38 24 40 53 77
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 313,367,508.20
சீட்டிழுப்பு வாரம் 1210
திகதி 2023.03.14 செவ்வாய்க்கிழமை
DLB
தொலைபேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1860
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,476,740/-
08 18 19 22 J
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14889)

**076 825 7716** (ஆகாஸ்)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு

- மூன்று பரப்புக்காணி
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

(14900)

**076 436 5814**

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-6159)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

# மரண அறிவித்தல்



தாயின் மடியில் 31.05.1949 | இறைவன் அனைப்பில் 07.03.2023

## சின்னத்தம்பி துரைசிங்கம்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை சிவன்பண்ணை வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் பரிஸ் நகரை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைசிங்கம் அவர்கள் கடந்த 07.03.2023 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார் என்பதை மிகவும் துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னத்தம்பி - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்தம்பி யோகரட்ணம் (கனடா), சின்னத்தம்பி நடராசா (அபிராமி எலக்றிக்கல்ஸ், ஸ்ரான்லி வீதி), சின்னத்தம்பி சந்திரசேகரம் (பிரான்ஸ்), சி.புஸ்பராணி, காலஞ்சென்ற சின்னத்தம்பி - பத்மநாதனின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2023) வியாழக் கிழமை காலை 9 - 11.30 மணியளவில் (பிரான்ஸ் நேரம்) பரிஸ் நகரில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :- 077 071 2092, 021 222 2489 (C-6158)
தகவல் :- சி.நடராசா (சகோதரன்)

**மணமகன் தேவை**

இனம் :- இந்து கௌரவ குடும்பம் (V)
ஆண்டு :- 1992
நட்சத்திரம் :- பரணி
கிரகபாவம் :- 3/4
செவ்வாய்க்குற்றம் இல்லை
தொழில் :- விஞ்ஞான ஆசிரியர் (கல்வியியற் கல்லூரி)
எதிர்பார்ப்பு :- ஆசிரியர் அல்லது அரச திணைக்கள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

தொடர்புக்கு :-
**077 864 9878**
**077 126 0182** (Viber) (14866)

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6159)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

**வேலைவாய்ப்பு**

WEC நிறுவனத்தின் புதிய கிளை நிறுவனத்திற்கு ஆண் / பெண் இருபாலாரையும் இணைத்துக் கொள்ளவுள்ளோம். O/L, A/L படித்த அனைவரினாலும் விண்ணப்பிக்க முடியும். பகுதி நேரம் மற்றும் முழுநேர வேலையினை பெற்றுக்கொள்ள முடியும். வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி இலவசமாக ஒழுங்கு செய்து தரப்படும். நாள்தோறும் சலுகைகள் (Bonus) வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கண்டி, ஹட்டன்.

மேலதிக தகவல்களுக்கு :- (14897)
**077 689 3656 / 077 202 5118**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127

# மரண அறிவித்தல்



பிறப்பு - 21.07.1967 | இறப்பு - 14.03.2023

## பாலச்சந்திரன் பிரசாத் பாஸ்கரன்

(B.P.பாஸ்கரன் - எடிசன்கல்வி நிலைய அதிபர் (ஸ்தாபகர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 539A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் பிரசாத் பாஸ்கரன் அவர்கள் நேற்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பாலச்சந்திரன் பிரசாத் - இராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், கனகரத்தினம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அமிழ்தினியின் அன்புக் கணவரும், அஷ்வினியின் அன்புத் தந்தையும், குமாரசாமி, மீனாட்சியின் அன்புப் பேரனும், சுதாகரன் (சிறி - கனடா), சசிகரன் (கனடா), சசிகலா (கனடா), சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தமயந்தி, மஞ்சுளா, நெடுமாறன், தர்சினி, சிங்காரவேலன், அருணா, அனுசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலமுரளி, நளாயினி, அரிகரறாஜா ஆகியோரின் அன்பு சகலனும், தர்சிகன், சாருஜன், கனீஸ், சதுர்சன், விருசன், சுஜீவன், அமிதா, தியாரா, சாயிரா, தக்ஷரா ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், கீர்த்திவர்மன், அபிலாஷ், அபிசேக் ஆகியோரின் அன்பு மாமாவும், குமாரசாமி, கங்கைவேணியன் (வேணி - வேணி களஞ்சியம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2023) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது கல்வி நிலையத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 539A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :- குடும்பத்தினர்
சித்தப்பா - பரமநாதன் 070 222 2911, 001 416 554 0911,
சகலன் - பாலமுரளி - 905 409 0932, மைத்துனர் - அன்ரன் - 076 046 6709,
மாமா - கங்கைவேணியன் - 077 161 1865, தம்பி - சதீஸ்கரன் 001 416 828 708
(14898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.